REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர்: 4) பசனை: தை 27உ சனி (9—2—57) ★ ★ வெளியீடு: தை 28உ ஞாயிறு (10—2—57) (இதழ் 209

13 கோடி டாலர் கடன் வாங்க இந்தியா முனைகிறது!

புதுடில்லி, பிப். 8—

சர்வதேச செலாவணி நிதி நிறுவனத்திடமிருந்து 12 75 00,000 டாலர் பெறுவதற்கான ஒப்பந்தம் ஒன்றை இந்தியா செய்துகொண்டுள்ளதாகவும், இவ்வொப்பந்தப்படி உடனடியாக 6-கோடி டாலர்களைப் பெற்றுக் கொள்ளுமென்றும் மீதியை, ஒருமாதம் கழித்துப் பெற்றுக் கொள்ளுமென்றும் தெரிகிறது.

இதுதவிர, இந்தியாவிற்கு மேலும் சிறிது கடன் உதவி அளிக்கவும் அந்த நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ளதாம். இதனையொட்டி, இந்தியா, இந்த ஒரு ஆண்டிற்குள் எப்போது வேண்டுமானாலும் அந்நிறுவனத்திடமிருந்து 7,25,00,000 டாலர் பெற்றுக்கொள்ள உரிமை வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

ஜனநாயகக் கடமையாற்றும் வீரர்கள்

தேர்தலில் போட்டியிடும் கழக அபேட்சகர்கள்: முடிவான பட்டியல்

வரும் மார்ச் 1, 4, 6, 8, 11 ஆகிய தேதிகளில் தமிழ்நாட்டில் நடைபெறும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் கழக அபேட்சகர்களின் இறுதியான பட்டியல் இன்று வெளியாகிறது. கழகத் தோழர்கள் எதிர்த்துப் போட்டியிடும் அபேட்சகர்களின் விவரங்களும், கழக அபேட்சகர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சின்னங்களும் அடுத்து வெளியிடப்படும் :—

சென்னை

மாவட்டம்:

1. பேசின்பிரிட்ஜ்: என். வி. நடராசன்
2. எழும்பூர்: க. அன்பழகன்
3. ஆயிரம்விளக்கு: ஏ. வி. பி. ஆசைத்தம்பி
4. தியாகராயநகர்: ஜேசுபாதம்
5. வண்ணை: என். ஜீவரத்தினம்
6. பெரம்பூர் (தனி): சத்தியவாணி முத்து

செங்கற்பட்டு

மாவட்டம்:

1. காஞ்சிபுரம்: அண்ணா
2. சிபெரும்புதூர்: சி. வி. எம். அண்ணாமலை
3. பொன்னேரி: டி. சண்முகம்
4. ,, (தனி): செங்கம்
5. மதுராந்தகம்: கோதண்டன்
6. ,, (தனி): அங்கேசன்

வட ஆற்காடு

மாவட்டம்:

1. வேலூர்: மா. பா. சாரதி
2. திருவண்ணாமலை: ப. உ. சண்முகம்
3. தரிஞ்சாபுரம்: முருகையன்
4. போளூர்: களம்பூர் அண்ணாமலை
5. வாணியம்பாடி: முல்லை - வடிவேலு
6. திருப்பத்தூர்: எம். நடேசன்
7. அரக்கோணம்: ஏ. எஸ். சி. கிருஷ்ணசாமி
8. குடியேற்றம் (பொது): சாம்பசிவம்
9. திருவண்ணாமலை (தனி): சந்தானம்
10. ஆம்பூர்: சம்பங்கி
11. ஆற்காடு: இலட்சுமணன்
12. இராணிப்பேட்டை: உத்தரிநாதன்

தென் ஆற்காடு

மாவட்டம்:

1. வளவனூர்: ஏ. கோவிந்தசாமி
2. புவனகிரி: பாலகுருசாமி
3. சிதம்பரம்: பொன். சொக்கலிங்கம்
4. விழுப்புரம்: சண்முகம்
5. கள்ளக்குறிச்சி (பொது): சி. நடராசன்
6. ,, (தனி): எம். ஆனந்தன்
7. நெல்லிக்குப்பம் (பொது): வி. கிருஷ்ணமூர்த்தி
8. ,, (தனி): இராசாங்கம்
9. விருத்தாசலம்: எம். செல்வராஜ்
10. உளுந்தூர்பேட்டை: பெ. பொ. இராமன்
11. கடலூர்: இளம்வழுதி

சேலம்

மாவட்டம்:

1. சேலம் I: இரா. நெடுஞ்செழியன்
2. சேந்தமங்கலம்: ஜி. பி. சோமசுந்தரம்
3. நாமக்கல் (பொது): காவியப்பன்
4. ,, (தனி): மருதைவீரன்
5. கிருஷ்ணகிரி: நாராயணன்
6. பெண்ணாகரம் (பொது): என். பி. முனுசாமி
7. சங்கரி (பொது): இரெ. தாண்டவன்
8. திருச்செங்கோடு (பொது): எஸ். ரங்கசாமி
9. ,, (தனி) முத்துசாமி
10. அரூர் (பொது): டி. பொன்னுசாமி
11. ,, (தனி): சி தீர்த்தகிரி
12. ஆத்தூர் (பொது): எம். பி. சுப்பிரமணியம்
13. ,, (தனி): டி. இருசப்பன்
14. மேட்டூர்: க. கு. சின்னசாமி
15. தாரமங்கலம்: கே. எஸ். சின்னப்பன்
16. இராசிபுரம்: கே. வி. கே. இராமசாமி
17. தருமபுரி: பி. எம். குப்புசாமி
18. சேலம் ரூரல்: அரியரபுத்ரன்
19. வீரபாண்டி: பழனிசாமி

தஞ்சை

மாவட்டம்:

1. தஞ்சை: பெத்தண்ணன்
2. குடந்தை: கே. கே. நீலமேகம்
3. மாயவரம் (பொது): வெங்கடகிருஷ்ணன்
4. ,, (தனி): கே. பிச்சை
5. சீர்காழி (பொது): ஜம்பு
6. ,, (தனி): வேலாயுதம்
7. நாகை: நாகூர்-அனிபா
8. முத்துப்பேட்டை (பொது): தருமலிங்கம்
9. ,, (தனி): அம்பிகாபதி
10. பாபநாசம் (தனி): அரிஅரநாதன்
11. அதிராம்பட்டினம்: என். எஸ். இளங்கோ
12. அறந்தாங்கி: ஷேக் அப்துல் காதர்
13. திருவையாறு: பட்சிராசன்
14. கந்தர்வகோட்டை: தங்கமுத்து
15. பட்டுக்கோட்டை: அருணாசலம்
16. மன்னார்குடி: என். அருணாசலம்
17. ஆடுதுறை: தருமன்

கோவை

மாவட்டம்:

1. கோவை I: சிவசாமி
2. ,, II (பொது): எஸ். ஏ. இராசமாணிக்கம்
3. கோவை II (தனி): சடையப்பன்
4. சூலூர்: சண்முகசுந்தரம்
5. உடுமலை: கே. ஏ. மதியழகன்
6. சென்னிமலை: எஸ். கே. சுந்தரம்
7. கூனூர்: ஒலியழகன்
8. பல்லடம்: பொன்னுசாமி
9. காங்கேயம்: முத்து
10. பொள்ளாச்சி (பொது): அ. ச. பாலு
11. ,, (தனி): இராமசாமி
12. கோபி: சி. ஈ. கன்னியப்பன்
13. பவானி: சென்குயன்

மேலும்!

மேலும் இரண்டொரு தொகுதிகளில் அபேட்சகர்களின் பெயர்கள் விரைவில் அறிவிக்கப்படும்.

திருச்சி:

மாவட்டம்:

1. திருச்சி II: காமாட்சி
2. குளித்தலை: கருணாநிதி
3. கரூர்: எம். குழந்தைவேலு
4. பெரம்பலூர் (பொது): ஆதிமூலம்
5. ,, (தனி): இரத்தினசாமி
6. முசிறி (பொது): முத்துக்கருப்பன்
7. ,, (தனி): துரைராஜ்
8. அரியலூர்: நாராயணன்
9. டி. பழூர்: எஸ். இராமசாமி
10. பஞ்சப்பட்டி: குழந்தைவேலு
11. அரவக்குறிச்சி: என். இரத்தினம்
12. லால்குடி: அம்பில்-தருமலிங்கம்
13. ஆலங்குடி (பொது): வி. சுப்பையா

நெல்லை

மாவட்டம்:

1. தூத்துக்குடி: எம். எஸ். சிவசாமி
2. கடம்பூர்: வே. மு. மாரியப்பன்
3. அம்பை: எஸ். கந்தசாமி
4. சங்கரன்கோயில் (பொது): வெள்ளைத்துரை
5. ,, (தனி): சி. சண்முகம்
6. கோயில்பட்டி: அ. சு. சி. பொன்னுசாமி
7. ஸ்ரீவைகுண்டம்: ஜெகவீரராஜேந்திரன்

மதுரை:

மாவட்டம்:

1. மதுரை (மத்தியம்): எஸ். முத்து
2. தேனி: எஸ். எஸ். இராசேந்திரன்
3. கோடைக்கானல்: வி. வி. குருசாமி
4. மேலூர் (பொது): ஏ. வேல்சாமி
5. ,, (தனி: பி. சமதர்மம்
6. நிலக்கோட்டை (பொது): ஆவுடையப்பன்
7. ஆத்தூர்: வி. எஸ். எஸ். மணி
8. திண்டுக்கல்: ஜனார்த்தனம்

இராமநாதபுரம்

மாவட்டம்:

1. திருக்கோட்டியூர்: கண்ணதாசன்
2. சிவகெங்கை: வி. வீரப்பன்
3. திருவாடானை: இராம. வெள்ளையன்
4. காரைக்குடி: இராம. சுப்பையா
5. திருவில்லிபுத்தூர் (பொது): மா. குருசாமி
6. ,, (தனி)) எஸ். செல்லையா
7. சிவகாசி: ஏ. சுப்பையா

கன்னியாகுமரி

மாவட்டம்:

1. நாகர்கோயில்: எஸ். முத்துசாமி
2. குளச்சல்: எஸ். எம். எஸ். அமீது
3. கன்னியாகுமரி: எஸ். எம். குமாரசாமி

★

கருநாடக மாநிலம்

1. கோலார் தங்கவயல்: சாம்பசிவம்
2. பெங்களூர்—பிராட்வே: எம். நாகராசன்

★

பார்லிமெண்டு

தென்சென்னை: பி. பாலசுப்பிரமணியம்

நாமக்கல் (பொது): ஈ. வெ. கி. சம்பத்

,, (தனி): டி. வி. சுந்தரராசன்

கரூர் தொகுதி: இரா. செழியன்

நாகை ,, : நாஞ்சில் மனோகரன்

திருச்சி ,, : எம். எஸ். மணி

சிதம்பரம் (பொது): குழந்தை

,, (தனி): புலவர் ஆறுமுகம்

திருப்பத்தூர் (வ. ஆ.): சி. பி. சிற்றரசு

திருவண்ணாமலை: தருமலிங்கம்

திருச்செங்கோடு: ப. இராமலிங்கம்

(சட்டசபை—பார்லிமெண்டு ஆதரவாளர்கள் பட்டியல் 4-ம் பக்கம்)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

காங்கிரஸ் எதிர்ப்புச் சக்திகளை வலுப்படுத்த கழகம் மேற்கொண்ட முயற்சி!

'காங்கிரஸ் தோல்வியடைவதற்கான வாய்ப்பு வலிவாக உள்ள சில தொகுதிகளில், ஒன்றுக்கு மேற்பட்ட அபேட்சகர்கள் காங்கிரசை எதிர்த்து நிற்பதால் பாதகமான சூழ்நிலை உருவாகி வருவது குறித்து, அத்தகைய தொகுதிகளில் உள்ள கழகத் தோழர்கள், முக்கியஸ்தர்கள் ஆகியோருடன் கூடிக் கலந்து பேசியதில், காங்கிரசை முறியடிக்கும் வாய்ப்பினை வலுவாக்குவதற்காகவும், காங்கிரஸ் எதிர்ப்புச் சக்தி சிதறுண்டு போகாமலிருக்கச் செய்யவும், பொது மக்கள் முன்பு உள்ள பிரச்சினை சிக்கலுள்ளதாகாமலிருக்கவும், தகுந்த வழிவகை கண்டறிய வேண்டி ஏற்பட்டது. காங்கிரஸ் எதிர்ப்பாளர்களுக்குள்ளாகவே வீண்போட்டிகள் எழாதபடி தடுக்க சில ஏற்பாடுகளும் எடுத்துக் கொள்ளப்பட்டன.

அதன்படி, தி. மு. கழக அபேட்சகர்கள் போட்டியிடும் பல தொகுதிகளில், போட்டியிட இருந்த காங்கிரஸ் எதிர்ப்பாளர்கள் விலகினர். நாமும் அதற்கு ஈடுசெய்யும் விதமாகவும், வீண் சிக்கலைத் தவிர்க்கும் முறையிலும் சில இடங்களில் விலகிக் கொண்டு, காங்கிரஸ் தோல்விக்கான சூழ்நிலையைச் செம்மைப் படுத்தி வைக்க ஒப்பவேண்டியதாயிற்று.

இந்த ஏற்பாட்டுக்கு நமது கழக அபேட்சகர்களாக நிறுத்தப்பட்ட தோழர்கள் பெருந்தன்மையுடன் சம்மதமளித்துக் காங்கிரஸ் சர்வாதிகார ஒழிப்புக்குத் தங்கள் சக்தியைப் பயன்படுத்த இசைவு அளித்துள்ளனர். (விவரம் விரைவில் அறிவிக்கப்படும்)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 9—2—'57 சனி

கோபாலர் விளக்கமும்— விருப்பமும்

"மத்திய அரசாங்க சபைகளில் தென்னாட்டு மக்களுடைய 'செல்வாக்கை' உணர்த்த, அவர்கள் தங்களிடையுள்ள மொழி வேற்றுமைகளையும் மறந்து ஒன்றுபட்டாக வேண்டும்."

"இந்த ஒற்றுமை ஏற்பட்டாலன்றி, தென்னாடு, வடநாட்டிற்கு எதிராகத் தன்னைக் காப்பாற்றிக்கொள்வது முடியாதுபோய்விடும்."

திராவிட முன்னேற்றக் கழக உள்ளுணர்வுடன், வடநாடு தென்னாடு என்ற சொற்களை வெளிப்படையாகப் பயன்படுத்தி, வடநாட்டிற்கு எதிராகத் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள, மொழி வேற்றுமைகளை மறந்து தென்னாட்டினர் அனைவரும் ஒன்றுபட்டாக வேண்டும் எனப் பேசி இருப்பவர் ஒரு கழகத்தவராகத்தான் இருந்தாக வேண்டும் என்றே எவரும் முடிவுகட்டிக்கொள்ளுவர். இப்படி நினைத்து, நினைத்த அளவுடன் நின்றுவிடாது, தாம் நினைத்ததை வெளிப்படையாகத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் கூறக்கூடியவர் நமது கழகத்தவராகத்தான் இருந்தாக வேண்டும் என ஒருவர் கருதிக்கொள்ளுவதில் தவறு எதுவும் இல்லை யாது.

நேருக்கு நேராகக் கண்டுவரும் உண்மையை உள்ளது உள்ளவாறும், மற்றவரின் எதிர்ப்புக்கும் எள்ளனத்திற்கும் அஞ்சாமலும், வெளிப்படையாகக் கூறிவரும் பண்பு நமது கழகத்தவருக்கே உரித்தான தனிச் சிறப்பு என்பதில் எவருக்கும் ஆட்சேபணை இருக்க நியாயம் இல்லை. இருந்தாலும், காங்கிரசு தேசியத் தொட்டிலிலேயே குழந்தைப் பருவ முதல் வளர்க்கப்பட்டுவரப்படுகிற காங்கிரசுத் தலைவர்களென்ற சிறப்புக்குரியவர்களாக இருக்கும் சிலர்கூட, வடவர் ஆதிக்கம் அளவு கடக்கின்றகாலை—மத்திய அரசாங்கம் மிரட்டுகின்றவேளை—டெல்லி ஆதிபத்தியம் தம்மைக் குட்டிக் குனிய வைக்கின்ற தருணம் தங்களையும் அறியாமல் வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் ஆணவப் போக்கு குறித்தும் அதை எதிர்த்து ஒடுக்கித் தீர வேண்டிய இன்றியமையாமை பற்றியும் அதற்காகத் தென்னகத்தார் அணிவகுத்துத் தீரவேண்டிய கட்டாயம் குறித்தும், வெளிப்படையாகவும் தெளிவாகவும் கூறவேண்டிய கட்டாயத்திற்கு வந்துவிடுகின்றனர். அத்தகு கட்டாயத்திற்கு ஆளாகி வடநாட்டு ஆதிபத்தியத்தை அடக்க வேண்டியதன் அவசியத்தையும், அதற்குத் தென்னகத்தாரிடை ஒற்றுமை உணர்வு உருவாக வேண்டும் என்ற இன்றியமையாமையையும் எடுத்துக்காட்டியுள்ளார் ஆந்திர அமைச்சர் கோபாலர் (ரெட்டியார்) அவர்கள். அவர் தெளிவுரையின் பகுதிதான் தலைப்பில் தரப்பட்டு இருக்கிறது.

வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் இருந்துவரும் உறவு குறித்து நமது கழகம் எவ்வாறு மதிப்பிட்டிருக்கிறதோ, அம்மதிப்பீட்டில் அணுவளவும் குறையாத அளவிலேயே அமைச்சர் கோபாலர் அவர்களும், அவ்வுறவின் தன்மையை சிக்கறத் தெரிந்து கொண்டுள்ளார்கள் — மக்களுக்குத் தந்துமுள்ளார்கள்.

நமது கழகத் தலைவர்களில் பலரைப்போல், காங்கிரசுக் கட்சியின் எதிர்ப்பாளராகவே தம்முடைய அரசியல் வாழ்வைத் துவங்கி அரசியல் துறையில் பணிபுரிந்துவருபவரல்லர் அமைச்சர் கோபாலர். கல்வி கற்கும் நிலையிலும் சாந்திநிகேதனத்தின் வங்க தேசியத்தை விருப்புடன் பருகி அறிவுப் பக்குவம் அவர் பெற்றிருப்பவராவார். அவருடைய அரசியல் வாழ்வு காங்கிரசுக் கட்சியுடன் பின்னிக்கொண்டு இருப்பதாகும்.

கல்லூரி நிலையில் தாம் பெற்ற வங்க தேசிய மணமோ, காங்கிரசுடன் சேர்ந்து சிறைவாழ்வில் தாம் பெற்ற அல்லலோ, பல்லாண்டுக்காலம் காங்கிரசு அமைச்சரவையில் இடம் பெற்று டெல்லியுடன் ஏற்படுத்திக்கொண்ட நட்புறவோ, தென்னாட்டின்மீது வடநாடு செலுத்திவரும் ஆதிக்கத்தை உணர்ந்து கொள்வதிலிருந்து அமைச்சர் கோபாலரைத் தடுத்து நிறுத்திவிடவில்லை. பல்லாண்டுக்காலம் அனுபவித்த பிறகு கூறுகிறார்—'தென்னாட்டின்மீது வடநாடு ஆதிக்கம் செலுத்துகிறது' என்று, அமைச்சர் கோபாலர்.

பதவி இழந்த ஆத்திரத்தினால் இப்படி வடநாட்டை மாசுபடுத்திப் பேசுகிறாரா இந்த ஆந்திர அமைச்சர் என்றால், அப்படியும் கூறிவிடுவதற்கில்லை. அமைச்சர் பதவியில் இருந்து கொண்டேதான், வடநாட்டின் ஆதிக்கம் குறித்துக் குறைபட்டுக் கொண்டுள்ளார், ஆந்திர அமைச்சர்.

காங்கிரசுத் தலைவர்களை இப்படிக் கூறி அச்சுறுத்தினால்தான் தனக்குப் பதவி தர வட நாட்டுக் காங்கிரசுத் தலைமை முன்வரக்கூடும் என்ற எண்ணத்தில்தான் இவ்வாறு அவர் பேசியிருக்கக்கூடும் எனக்கொள்வதற்கும், அமைச்சர் பதவியில் அவர் ஏற்கனவே இருந்துவருவது, இடம் தருவதாக இல்லை.

எனவே, காங்கிரசுக் கட்சியினராகவும் அமைச்சராகவும் இதுவரை இருந்து, அனுபவவாயிலாகத் தாம் பெற்றுள்ள பாடத்திலிருந்துதான், தென்னாட்டின்மீது வடநாடு செலுத்திவரும் ஆதிக்கத்தைப் பிரிதெடுத்துத் தென்னாட்டு மக்களுக்குத் தெளிவாகத் தர முன்வந்திருக்கிறார் அமைச்சர் கோபாலர்என்றே நாம் முடிவு கட்டுகிறோம்.

தென்னாட்டை, அதிக் வாழும் நம்மவரை வடநாடு எந்த நிலையில் நடத்த மறுக்கிறது என்பது மட்டுமல்லாமல், ஒதுக்கித்தள்ளவும் செய்கிறது என்ற மகத்தான உண்மை வெளிப்பட, அமைச்சர் கோபாலர் வடநாட்டு ஆதிக்கம் பற்றி எடுத்து விளக்கியுள்ளார்.

'மத்திய அரசாங்க சட்ட சபைகளில் தென்னாட்டு மக்களுடைய 'செல்வாக்கை' உணர்த்த, அவர்கள் தங்களிடை உள்ள மொழி வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டாக வேண்டும்' எனக்கூறும் ஆந்திர அமைச்சர் உரையின் உள்ளடக்கம் என்ன? இதுவரை நமது தென்னாட்டினர் செல்வாக்கு டில்லி மக்கள்சபையில் உணர்த்தப்படவில்லை — உணர்த்தத் தவறிவிட்டோம்—இனியாவது உணர்த்தத் தென்னாட்டவர் முன்வரவேண்டும் என்ற உண்மையல்லவா, அமைச்சர் வாயுரையின் உள்ளடக்கமாக அமைந்திருக்கிறது? அதுமட்டுமா?

தென்னாட்டவர் செல்வாக்கைத் தாங்களாக உணர்ந்து கொள்ளும் நற்பண்பு, வடநாட்டினருக்கு இதுவரை என்றுமே இருந்தது கிடையாது என்ற உண்மையையுமல்லவா, அமைச்சரின் வாயுரை உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது?

பலம் பொருந்தியத் தனி அணியாகத் திரண்டு நின்று, எதிர்க்கும் துணிவுடன் டில்லி மக்கள் சபையில் செயல்பட தென்னாட்டவர் ஒன்றுபட்டு முன்வந்தால்தான், தென்னாட்டவரின் செல்வாக்கை வடநாட்டினர் உணர்ந்துகொள்ளுவது நிறைவேறக்கூடும் என்றல்லவா, ஆந்திர அமைச்சர் வேதனையுடனும் கொடுஞ் சீற்றத்துடனும் கூறுகிறார்?

அமைச்சர் விருப்பப்படி, தென்னாட்டவர் அனைவரும் ஒன்றுபட்டு மக்கள் சபையில் துணிவுடன் செயல்படுவதாகவே வைத்துக்கொண்டாலும், அந்த நிலையிலாவது தென்னாட்டினர் செல்வாக்கை மதித்து நடந்துகொள்ள வட நாட்டினர் முன்வருவர் என எப்படி நம்பமுடியும்? அவ்வாறு உறுதி கூறுவது யார்? அத்தகைய உறுதியளிப்பதற்கு எவருக்கு உரிமை உண்டு?

'இந்த ஒற்றுமை ஏற்பட்டாலன்றி, தென்னாடு, வடநாட்டிற்கு எதிராகத் தன்னைக் காப்பாற்றிக் கொள்வது முடியாது போய்விடும்' என்று ஆந்திர அமைச்சர் புண்பட்ட நெஞ்சுடன் எச்சரிக்கின்றார்.

"வடநாடு — தென்னாடு — தென்னாட்டை வடநாடு ஆதிக்கம் செலுத்தி வருகிறது— வடநாட்டிற்கு எதிராகத் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள, தென்னாடு ஒன்றுபட்டால்தான் சாத்தியமாகும்."

இப்படி ஒரு ஆந்திர காங்கிரஸ் அமைச்சர், இந்தியப் பேரரசு அமைப்பு குறித்தும் பத்தாண்டுக் காலமாக ஆட்சி புரிந்துவரும் காங்கிரசு தலைமை குறித்தும், தாம் பெற்ற அனுபவங்களை ஒன்று திரட்டித் தந்துள்ளார். என்ன பொருள் இதற்கு?

வடநாடு ஒரு முகாம்—தென்னாடு ஒரு தனி முகாம் என்ற ரீதியில் இந்தியப் பேரரசு அமைந்து இருக்கிறது என்பதைத்தானே ஆந்திர அமைச்சர் அறிந்து பேசி இருக்கிறார்.

ஆதிக்கம் செலுத்துவது வடவர் அரசு—அதற்குப் பணிந்து கிடப்பது தென்னவர் மாநில ஆட்சிகள்—என்ற கருத்தைத் தானே ஆந்திர அமைச்சர் கோபாலர் அடித்துரைக்கிறார்?

வடவர், தென்னவர்மீது ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்—என்ற உண்மையைத் தானே, அமைச்சர் மனம் வெதும்பி விளம்பியுள்ளார்?

தென்னாட்டினர் ஒன்றுபட்டாகவேண்டும்—இப்படி ஆந்திர அமைச்சர் முறையிட்டுக் கொள்ளுகிறார்.

அப்படி ஒன்றுபடத் தென்னாட்டவர் தவறிவிடும் பட்சத்தில், வடநாட்டிற்கு எதிராகத் தன்னைக் காப்பாற்றிக்கொள்வது முடியாது போய்விடும்—என்று ஆந்திர அமைச்சர் அலறுகிறார்.

தென்னாட்டவர் பிணங்கிக் கிடந்தால், வடநாட்டு ஆதிக்கம் எப்பொழுதும்போல் வெறியாட்டம் போட்டே வரும் என்கிறார் காங்கிரசு அமைச்சர் கோபாலர்.

ஆந்திர அமைச்சரின் கருத்துரையில், திராவிடம் என்ற சொல் இடம் பெற்றிருக்கவில்லை. ஆனால் திராவிடம் என்ற சொல்லின் உள்ளுணர்வு நூற்றுக்கு நூறும், அமைச்சர் கோபாலரின் வடநாடு—தென்னாடு என்ற விளக்கத்தில் படிந்து கிடக்கிறது.

காலப்போக்கில் தென்னகத்து மொழி வழி ஆட்சிகள் நான்கும் அமைச்சர் கருத்துப்படி அறவழியில் ஒன்றுபடுவதுடன், சட்டரீதியிலும் கூட்டாட்சியாக ஏன் மலராது? அவ்வாறு மலருவதற்கு எது தடையாக இருக்கும்? மொழி வழி மாநில அமைப்புகள் கண்டு, அறிந்தோ அறியாமலோ நமது கழகத்தின் அரசியல் இறுதி இலட்சியம் அடிசாய்ந்துவிட்டது என்று அங்கலாய்க்கின்றவர்களுக்கு, அமைச்சர் கோபாலரின் அனுபவ விளக்கமும் விருப்பமும் தெளிவளிக்கும் என நம்புகிறோம்.

எகிப்துக்கு ரஷ்ய இராணுவத் தளவாடங்கள்?

எகிப்திய இராணுவத்தின் ஆயுதப் பலத்தை அதிகப்படுத்துவதற்காக டாங்கிகள், ஜெட்போர் விமானங்கள், போன்றவை அலெக்சாண்டிரியா துறைமுகத்தில் ரஷ்யக் கப்பல்களிலிருந்து இரகசியமாக இறக்கப்பட்டு வருவதாக அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர்.

கஷ்டப்பட்டு...

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இப்போது எத்தனை உயிர்கள் பரிதாபகரமாகக் கொல்லப்படுகின்றன என்ற கேள்வியை நாம் எழுப்புவதில் அநியாயம் என்ன இருக்க முடியும்?

இப்படிப்பட்ட நியாயமான கேள்விகளையும் கோரிக்கைகளையும் மக்கள் மத்தியில் எழுப்பித் தேர்தலில் ஈடுபட முன்வந்திருக்கும் நம்மைப்பார்த்து மற்றோர் பேசுகிறார்கள்—தூற்றுகிறார்கள் என்பதற்காகக் கழகத் தோழர்கள் கவலைப்படவேண்டியதில்லை ஏனென்றால் தேர்தலில் ஓட்டுப் போடும்போது, 'உதய சூரியன்' பெட்டிக்குப் பக்கத்தில் 'மாட்டுப் பெட்டி' இருந்தால் நாணயமும், மனச்சாட்சியும் உள்ள எந்த ஒரு தோழனும் 'மாட்டுப் பெட்டி'க்கு ஓட்டுப் போடமாட்டான். ஏனென்றால், சேலத்தில் ஒரு தோழர் கண்ணைப் பறிகொடுத்ததையும், வேறு ஒருவர் ஒரு காலை இழந்ததையும், நீடாமங்கலத்தில் ஒருவரைக் கட்டிவைத்து அடித்ததையும், உடையார்பாளையம் வேலாயுதத்தின் கல்லறைமீது காங்கிரசார் காறித் துப்பினதையும் மனதில் எண்ணிக்கொள்ளும் எந்த ஒரு மாற்றாரும் — சுயமரியாதை உள்ளம் படைத்த எவரும், 'காங்கிரசுக்கா நமது ஓட்டு?' என்று கணநேரமாவது எண்ணிப் பார்ப்பர்; அப்படி எண்ணிப் பார்க்கும் எவரும் நிச்சயம் 'மாட்டுப் பெட்டி'க்கு ஓட்டுப் போடமாட்டார்கள்; நமது பெட்டிக்குத்தான் போடுவார்கள். எனவே இப்போது அவர்கள் ஏசுகிறார்கள்—பேசுகிறார்கள் என்பதற்காக யாரும் கவலைப்படவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்."

இந்திய பேரரசின் குழப்பம்

உணவுப் பிரச்சினையை தீர்ப்பதில் தடுமாற்றம்

முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்குவதையே இலட்சியமாகக்கொண்டு செயலாற்றப்பட்டது. ஆனால், அத்துறையில் நிலவிவரும் குழப்பங்கள், இந்தியப் பேரரசின் இலட்சியம் நிறைவேறிபுள்ள இலட்சணத்தைச் சுட்டிக் காட்டுவதாகவே இருக்கிறது.

1951-ல் ரூ. 216 கோடி மதிப்புள்ள 47 இலட்சம் டன் அரிசியும், 1952-ல் ரூ 210 கோடி மதிப்புள்ள 30 இலட்சம் டன் அரிசியும், 1953-ல் ரூ 85 கோடி மதிப்புள்ள 21 இலட்சம் டன் அரிசியும், 1954-ம் ஆண்டில் ரூ 47 கோடி மதிப்புள்ள அரிசியும், 1955-ல ரூ 35 இலட்சம் பெறுமானமுள்ள அரிசியும இறக்குமதி செய்யப்பட்டிருப்பதாக மத்திய அரசாங்க உணவு இலாகா அமைச்சர் கிருஷ்ணப்பா தெரிவித்துள்ளார்.

1956-ம் ஆண்டில் ரூ 15 கோடி பெறுமானமுள்ள அரிசியை அண்டை நாடுகளுக்கு இந்தியா ஏற்றுமதி செய்ததாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில 20-இலட்சம டன் உணவுத் தானியத்தைச் சேமித்து வைத்துக்கொள்ள இந்தியா விரும்புவதாகவும், இதற்காக ரூ 30 இலட்சம் செலவில் ஒரு பெரிய பண்டகச்சாலையை பெங்களூரில் கட்ட அரசாங்கம் யோசித்து வருவதாகவும் அமைச்சர் கூறியிருக்கிறார்.

அரிசி வியாபாரிகளுக்கு பாங்கி (கடன்) வசதிகளைக் கட்டுப்படுத்துமாறு இந்திய ரிசர்வ் பாங்கியை மத்திய சர்க்கார் கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

அரிசி விலையேற்றத்தை ஒடுக்கவும், பதுக்கலை ஒழிக்கவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் கூறியுள்ளார்.

சென்ற டிசம்பரில் மணங்கு ரூ. 21 ஆக விற்ற அரிசி 16 ரூபாயாகக் குறைந்துவிட்டதால் அரசாங்கம் அரிசியைக் கொள்முதல் செய்ததென்றும், ஆனால், சனவரியில மீண்டும் விலை ஏறிவிட்டபடியால், கொள்முதல்திட்டம் கைவிடப்பட்டதெனறும வியாபாரிகளுக்கு அளிக்கப்பட்ட பாங்கி வசதிகளும் கட்டுப்படுத்தப்பட்டது என்றும் அவர் விளக்கினார்.

அரிசி நிலைமையை பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்றும், அமெரிக்காவும், பர்மாவும் அரிசியை அனுப்புகிறது என்றும், நியாய விலை கடைகளின் மூலம் குறைந்த விலைக்கு அரிசி விற்கப்படும் என்றும் அவர் கூறினார்.

ஆசிய-ஆப்பிரிக்க நாடுகள் மாநாடு நடைபெறுமாம்

கொழும்பு, பிப். 7—

அடுத்த ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் மாநாடு இந்த ஆண்டு இறுதியில் நடைபெறுமென்று இலங்கைப் பிரதமர் தெரிவித்துள்ளார். சீனப் பிரதமரும், அந்த மாநாட்டை விரைவில் நடத்தவேண்டும் என்று விரும்புவதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

‘கஷ்டப்பட்டுக் கண்ணீர் சிந்தி சம்பாதிக்கும் ஏழையின் பொருள் வரியின் பேரால் கொள்ளையடிக்கப்படும் கொடுமை தீருவது எப்போது?’

‘மக்களின் நம்பிக்கையை இழந்தவர்கள் கவர்னர்களாக்கப்படுவதுதான் ஜனநாயகமா?’

மக்கள் மன்றத்தில் கேள்வி எழுப்புகிறார் டி. கே. சீனிவாசன்

கடந்த 4-ந்தேதியன்று சென்னை—கொருக்குப்பேட்டையில் நடைபெற்ற தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம் இங்கு தரப்படுகிறது :—

“தேர்தல் நெருங்க நெருங்கக் காங்கிரசாரும், மற்றோரும் நம்மைத் தூற்றுவதில் தீவிரமாக முனைந்துள்ளனர். தேர்தல் என்றாலே தூற்றுவதுதான் என்ற விசித்திரமான வியாக்கியானம் கொண்டிருப்பவர்களாதலால் அவர்கள் நம்மைத் தூற்றுகின்றனர்; என்றாலும் பரவாயில்லை; அவர்கள் பண்பாட்டில் குறைந்தவர்கள்—தூற்றுகிறார்கள்—எனவே, கழகத்தவராகிய நாம் தாங்கிக்கொள்கிறோம்.

“ஆனால், பண்பாடு குன்றியவர்களெல்லாம் தூற்றிப் பேசுகிறபோது, படித்தவர்—புகழ் பெற்றவர் எனப் பேரெடுத்த பண்டிதர் நேருகூடத் தூற்றுகிறார் என்ற நிலைமைதான் நமக்கு அவர்மீது பரிதாபத்தைத் தோற்றுவிக்கிறது பாவம்; அவர் நம்மைத் தூற்றுவது ஆத்திரத்தால் அல்ல; ஆனால் தூற்றிப் பேசித்தான் நம்மை வெற்றி காண முடியும் என்ற நிலைக்கு இறங்கிவிட்டார். ஆனால் தி. மு. கழகம் என்றாவது அப்படி ஒரு நிலைக்கு ஆளாகாது; ஏனென்றால், எவரையும் தூற்றக்கூடாது என்ற உயரிய கொள்கையைக் கொண்ட அண்ணா அவர்களைத் தலைவராகப் பெற்று இயங்கும் கழகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல—நமது கொள்கை கோட்பாடுகளைச் சொல்லியே வெற்றிபெறமுடியும் என்ற நம்பிக்கையையும் பெற்றிருப்பவர்கள் நாம்!

“உண்மையிலேயே, கடந்த 10 ஆண்டுகளாக ஆட்சி நடத்தி, அந்த ஆட்சியின்போது எதும் பலன் இல்லை என்ற உண்மை நிலை மக்களுக்குத் தெரிந்துவிட்டது என்ற உண்மையை அறிந்துகொண்டுங்கூட, மறுமுறையும் இப்போது மக்களிடம் வந்து ஓட்டுக்கேட்கும் காங்கிரசாரின் நெஞ்சுரத்தைப் பாராட்டாமலும் இருக்க முடியவில்லை.

“வெள்ளையன் இந்த நாட்டை ஆண்டுகொண்டிருந்த காலத்தில் அவன் மீது ஒரு பெருங் குற்றச்சாட்டைக் கூறினார்கள்; அந்தக் குற்றச்சாட்டை எடுத்துக்கொண்டு போய் பேசாத ஊர் இல்லை—மேடை இல்லை—ஆள் இல்லை. என்ன அந்தக் குற்றச்சாட்டு? ‘இங்குள்ள மக்களைச் சுரண்டி அவர்களுடைய தலைகளில் வரிப் பளுவை ஏற்றி, அதன் மூலம் கிடைக்கும் பணத்தையெல்லாம் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள தனது நாட்டுக்கு அனுப்புகிறான்' என்பதுதான் அந்தக் குற்றச்சாட்டு!

“1947-ல் வெள்ளையன் வெளியேறினான்; அன்று ஆட்சிபீடத்தைப் பிடித்த காங்கிரஸ் இந்த 10 ஆண்டுகளாகச் செய்தது என்ன? வெள்ளையனுக்கும் தெரியாத புதுப் புது வரிகளையெல்லாம் இப்போது திணித்திருப்பதைத்தான் பார்க்கிறோமே தவிர, எந்த வரியை ‘ஒழித்துக்கட்டுவோம்' என்று கூறினரோ, அதைச் செய்தார்களா?

“சோற்றுக்குத் திண்டாடும் தொழிலாளி 1 ரூபாய் கடன் வாங்கி ஏதாவது பொருள் வாங்கினால் காலணா வரி கொடுக்கிறான்; அந்தச் சாமானை விற்கும் கடைக்காரன், அதை வாங்கின சில்லறை வியாபாரிக்கு காலணா வரி தருகிறான்; சில்லறை வியாபாரி, மொத்த வியாபாரியிடம் வாங்கும்போது காலணா வரி கொடுக்கிறான்; இப்படி மொத்த வியாபாரி பொருளுக்கு ஒரு ரூபாய் விலையென்றால், அதற்குக் காலணா வரி சேர்த்து 1 ரூபாய் காலணாவிற்கும், அதை வாங்கும் சில்லறை வியாபாரி மேலும் ஒரு காலணா வரி சேர்த்து ஒரு ரூபாய் அரையணா விற்கும், அந்தச் சில்லறை வியாபாரி சிறிய கடைக்காரனுக்குக் கொடுக்கும்போது கூடுதலாக ஒரு காலணா சேர்த்து ஒரு ரூபாய் முக்காலணாவிற்கும், அந்தக் கடைக்காரன், சாமானை வாங்குகின்ற ஏழையிடம் விற்கும் போது, கூடுதலாகக் காலணா சேர்த்து 1 ரூபாய் 1 அணாவிற்கும் கொடுக்கிறான். இப்படிக் கஷ்டப்பட்டுக் கஷ்டப்பட்டுக் கண்ணீர் சிந்தி ஏழைசம்பாதிக்கும் பொருள் வரியின் பேரால் கொள்ளையடிக்கப்படுகிறது. இந்த அவலட்சண ஆட்சியிலிருக்கும் காங்கிரசார்தான் ‘இதோ தி. மு. கழகத்தினரைத் தொலைத்துவிடுகிறோம் பாருங்கள்' என்று கூறித் திரிகிறார்கள்!

“‘இப்படி நாங்கள் விற்பனை வரி போட்டதற்குக் காரணம் உண்டு; அது என்ன தெரியுமா? நாங்கள் மதுவிலக்கை அமுலாக்குகிறோம்; அதனால் இழந்த வருமானத்தைப் பெறவே இந்த வரியை விதித்திருக்கிறோம்' என்கிறார்கள் காங்கிரசார். உண்மையிலேயே அவர்கள் மதுவிலக்கைக் கொண்டுவந்தார்கள் என்பது பாராட்டுக்குரியதுதான்; ஆனால், இந்த மது உண்மையிலேயே ஒழிந்துவிட்டதா? இல்லை! இன்னும் நாட்டில் நடமாடிக்கொண்டுதான் இருக்கிறது; இப்படி மது இருந்தபோதும் வரியும், இல்லாதபோதும் வரியும் கொடுக்கும் விசித்திரம் இந்தக் காங்கிரஸ் ஆட்சியில் நடைபெற்று வருகிறது

‘மேலும் இவர்கள், ‘வெள்ளையன் இரயில்வே கட்டணத்தை அதிகமாக வைத்திருக்கிறான்,' என்று கூறினார்கள்; இன்று நடப்பது என்ன? மேல்வாரியாக இப்போது சொல்கிறார்கள்—‘நாங்கள் இரயில் கட்டணத்தைக் குறைத்துவிட்டோம்,' — என்று! எப்படித் தெரியுமா? 300 மைலுக்கு அதிகமாக இரயில் பிரயாணம் செய்பவர்களுக்கு கட்டணத்தைக் குறைத்திருக்கிறார்கள்; 300 மைலுக்குக் குறைவாகப் பிரயாணம் செய்பவர்களுக்குக் கட்டணத்தை அதிகரித்துவிட்டார்கள். இதனால் யாருக்கு இலாபம்? ஏழைகளுக்கா, பணக்காரருக்கா? சாதாரண தொழிலாளிகளா 300 மைலுக்குமேல் பிரயாணம் செய்கிறார்கள்?

“வரி போடக்கூடாது என்று தி. மு. கழகம் கூறவில்லை; ஆனால் வரிபோடுமுன், அந்த வரிகளை மக்கள் தாங்கிக்கொள்ள முடியுமா என்பதை முதலில் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்றுதான் தி. மு. கழகம் கூறுகிறது.

“நமது தென்னாடு விவசாய நாடு. இங்கு வாழும் அனைவரும் விவசாயிகள். ஆனால் வடநாட்டிலோ, கண்டகண்ட இடங்களில் எல்லாம் ஆலைகள். இப்படி இருக்கும்போது, இங்கே எப்படி வருமானம் இருக்கும் என்று தட்டிக் கேட்கிறோம், நாம்!

“இந்த நாட்டில் ஒரு இடத்தில் 1,000 உழவர்கள் உழைக்கிறார்களென்றால், தலைக்கு ஒரு ரூபாய் கூலி வாங்கினால் 1 000 ரூபாய் கூலி பெறுகிறார்கள்; ஆனால் அதே நேரத்தில், ஆலையில் வேலை செய்யும் தொழிலாளி நாளொன்றுக்கு ரூ. 2 சம்பாதிக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அப்படியானால், இந்த நாட்டில், தேவையான ஆலைகளை நிறுவி, 1 000 விவசாயிகளில் 500 பேர்களை ஆலைகளுக்கு அனுப்பினால், மீதி இருக்கிற 500 விவசாயிகளும் 1,000 ரூபாயை தங்களுக்குப் பங்கிட்டுக் கொண்டால் தலைக்கு இரண்டு ரூபாய் சம்பாதிப்பார்களே? ஆலையில் வேலை செய்யும் 500 பேரும் தலைக்கு இரண்டு ரூபாய் சம்பாதிப்பார்களே? அப்படியானால் ஒவ்வொரு குடும்பத்தின் வருமானமும் சரிசமமாக இருக்குமே—இதை ஏன் சர்க்கார் செய்யவில்லை என்ற கேள்வியை எழுப்புகிறது தி. மு. கழகம்!

“அடுத்தாற்போல், அவர்கள் வெள்ளைக்காரர் மீது ஏவின குற்றச்சாட்டெல்லாம், ‘இவர்களை நொறுக்கவே முடியவில்லை—நமது குறைகளை எடுத்துக்கூற,' என்பது தான்! வெள்ளைக்காரனை நெருங்க முடியவில்லை என்றால், அவன் அந்நியன்; எனவே அவனை நெருங்க முடியவில்லை.. ஆனால், இப்போது இருக்கிற காங்கிரசார் யார்? அந்நியரா? இப்போது மட்டும் அவர் நெருங்கமுடியவில்லையே—ஏன்?

“அடுத்தாற்போல் ‘வெள்ளையர் ஜனநாயகத்தைக் கொலை செய்கின்றனர்,' என்று குற்றம் சும... னார்கள், இந்தக் காங்கிரசா... இவர்களுடைய ஆட்சியில் ஜனநா... த்தின் நிலை என்ன? மாயவ... தில் போட்டியிட்டு தோல்விக... சந்தானம் கவர்னராக்கப்பட்டா...—இது என்ன, மக்களை மதிக்... செயலா?

“தேர்தலில் நின்று தோல்வியுற்ற பி. எஸ். குமாரசாமி ராஜாவுக்குக் கவர்னர் பதவி கிடைத்ததே எப்படி? மக்கள் தீர்ப்பை மதித்தா? இவைகளெல்லாம் ஜனநாயகப் பாதுகாப்புச் செயல்களா என்றுதான் தி. மு. கழகம் மக்களைப் பார்த்துக் கேள்வி எழுப்புகிறது.

“கடந்த 1949-ல் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. திருச்சி லோகோ ஷெட்டில் ‘பிட்டர்' வேலை செய்த பொன்னுசாமி என்னும் தொழிலாளி ஒருவர், ஓடிக்கொண்டிருக்கும் இரயில் வண்டியை உடனடியாக நிறுத்துவதற்கு புதிய கண்ணாடி இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்துக் காட்டினார்; அதற்காக இரயில்வே நிர்வாகம் அவருக்கு ரூ. 50 பரிசும் அளித்தது. ஆனால், அந்த இயந்திரத்தை இரயில் வண்டிகளில் பொருத்தினார்களா? இல்லை இதுபற்றி மக்கள் சபையில் உறுப்பினர் ஒருவர் கேள்விகேட்ட போது, இரயில்வே அமைச்சர் சொன்னார்—‘யாரோ ஒருவன், எதையோ கண்டுபிடித்துவிட்டதாகக் கூறுவதை நம்பி அதைச் செயல்படுத்தக்கூடாது' என்று! இத்தனை ஆண்டுகளாகப் பார்க்கிறோம்—எத்தனை எத்தனை பேர் இரயில் விபத்துக்களில் சிக்கி உயிரை இழந்திருக்கிறார்கள்? அண்மையில் நடைபெற்ற அரியலூர் இரயில் விபத்தில் நூற்றுக் கணக்கில் மாண்டார்களே! இவைகளையெல்லாம் நேராகப் பார்த்துங்கூட இன்னும் நாட்டில் உலவி வருகிறார்கள்—இரும்பு உள்ளம் படைத்தவர்கள்!

“ஒரு தொழிலாளி கண்டுபிடித்தான் என்ற காரணத்திற்காகத் தட்டிக் கழித்தீர்களே அந்த இயந்திரத்தைக் கொண்டு வராமல்—

(2-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. கழக வரலாற்றில் முக்கிய கட்டம்

10—2—57 ஞாயிறு பிற்பகல் 3-மணிக்கு

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

[கே. வி. கே. சாமி அரங்கில்]

தி. மு. க.—தேர்தல் பிரச்சார

சிறப்பு மாநாடு

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள் தலைமை தாங்குவார்.

அண்ணா . . . கழகச் சொற்பொழிவாளர்களும் கருத்துரை வழங்குவர்

அவர்களும்

தி. மு. கழகத் தேர்தல் அறிக்கை (Election Manifesto) மாநாட்டில் பிரகடனப்படுத்தப்படும்.

பிற்பகல் 2-மணியிலிருந்து :

★

ஓவியக் காட்சிகள், எம். எம். முருகேசன் குழுவினர், வி. கே. சாமி உடற்பயிற்சிக் கழகத்தினர் ஆகியோரின் நிகழ்ச்சிகளும், டி. செயசுந்தரம் குழுவினரின்—‘தேர்தலில் நாம்' என்ற கதா காலட்சேப நிகழ்ச்சியும் நாடகமும் நடைபெறும்.

★

நுழைவுக் கட்டணம் அணா 4. தாய்மார்களுக்கு மட்டும் இலவசம்

நாட்டுக்கு நல்லாட்சி வருக்க—தி. மு. கழகத் தேர்தல் பணிக்குப் பேராதரவு தரத் திரண்டு வாரீர் !

★

ஊர்வலம் :

காலை $7\frac{1}{2}$ மணிக்கு இராயபுரம் ‘அறிவக'த்திலிருந்து ஒரு மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்று மாநாட்டுத் திடலை அடையும். கழக அபேட்சகர்களும், முன்னணி வீரர்களும் ஊர்வலத்தில் கலந்து கொள்வர்.

கழகத் தோழர்களே! தொழிலாளர்களே! திராவிடப் பெருங்குடி மக்களே !

திரளாக வாரீர் !

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கே.வி.கே.சாமி கொலைவழக்கில் தீர்ப்பு

நால்வருக்குத் தூக்குத் தண்டனை

மற்றும் ஐவர் விடுதலை

திருநெல்வேலி, பிப் 8—

கே. வி. கே. சாமி கொலை வழக்கில் இன்று செஷன்ஸ் நீதிபதி ஏ நாகசாமி அய்யர் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்.

குற்றம் சாட்டப்பட்டவர்களில் சந்தியாகு பொன்னுசாமித் தேவர் ஆத்தி ஜெகந்நாதன் ஆகிய நால்வரையும் குற்றவாளிகள் எனக் கண்டு அவர்களுக்குத் தூக்குத் தண்டனை வழங்கியிருக்கிறார்.

பெருமாள் நாடார், பெருமாள், இரா. சு. தங்கப்பழம், பொன்னையா நாடார், பாண்டியன் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

வெங்கடாசலம், சித்திரவேலு தேவர் ஆகியோர் அப்ருவர்களாக மாறியது தெரிந்ததே.

****-**********-****

ஆதரவாளர்கள்

பட்டியல்:

★

(பார்லிமெண்டு)

செங்கற்பட்டு (பொது) : டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி
(தனி) : என். சிவராஜ்
சேலம் : கணேச சங்கர்
நாகை (தனி): வீராசாமி
கடலூர்: கச்சிராயர்

★

(சட்டசபை)

செங்கற்பட்டு (தனி) : ஏ. இரத்தினம்
உத்தமபாளையம்: பி. டி. இராசன்
பாபநாசம் (பொது) : சீனிவாசம் பிள்ளை
திலக்கோட்டை (தனி): என். கன்னியப்பன்
பழனி: வெங்கிடுசாமி
போடி: முத்தையா

*-***************-*

இந்தியாவில் ஜப்பான் முதலீடு ?

புதுடில்லி, பிப். 9—

இந்தியத் தொழிற்சாலைகளில் முதலீடு செய்ய ஜப்பான் தயாராக இருக்கிறதாம்.

'அல்ஜீரியப் பிரச்சினையில் தலையிட ஐ. நா.-வுக்கு உரிமை உண்டு'

ஹங்கேரி பற்றிய முடிவைச் சுட்டிக்காட்டுகிறார் டுனீஷியப் பிரதிநிதி

நியூயார்க், பிப். 7—

'அல்ஜீரியப் பிரச்சினையில் தலையிட ஐ நா.-வுக்கு தகுதியில்லை என்ற பிரெஞ்சுக் கருத்து தவறானது"

என்று, டுனீஷியா இன்று அறைகூவியிருக்கிறது.

"ஹங்கேரி விவகாரத்தில் ஐ நா. மேற்கொண்ட முடிவு உள்நாட்டு விவகாரம் என்று கூறப்படும் விவகாரத்தில் தலையிட ஐ. நா.-வுக்கு உரிமை உண்டு என்பதை நிலைநாட்டியுள்ளது.

"தென் ஆப்பிரிக்காவில் வாழும் இந்தியர்கள் நடத்தப்படும் முறை குறித்து இந்த ஐ. நா. சபை விவாதித்திருக்கிறது; இந்த விவகாரமும், முழுக்க முழுக்க, உள்நாட்டு விவகாரம் என்று கூறப்பட்டதுதான்,"

என்று டுனீஷியப் பிரதிநிதி கூறியிருக்கிறார்.

நடந்தது என்ன ?

'அல்ஜீரியப் பிரச்சினையை அல்ஜீரிய மக்களே தீர்த்துக்கொள்ள வேண்டும்,' என்று 18 ஆசிய—ஆப்பிரிக்க நாடுகளின் தீர்மானம் பற்றி கருத்தறிவிக்கையில் பிரான்ஸ், 'அல்ஜீரியப் பிரச்சினையை விவாதிக்க ஐ நா. சபைக்கு அதிகாரம் கிடையாது' என்று எதிர்த்தது; பிரிட்டனும் பிரான்சும் தீர்மானத்தின் மீது பேசுகையில், பிரான்சின் எதிர்ப்புக்கு ஆதரவு தந்தன.

'அல்ஜீரியாவில் பிரான்ஸ் பின்பற்றும் கொள்கை, பிரான்சின் உள்நாட்டுப் பிரச்சினை; அதில் தலையிட ஐ. நா.-வுக்கு அதிகாரம் கிடையாது' என்று பிரிட்டிஷ் பிரதிநிதியும், 'அல்ஜீரியாவில் வெளியார் தலையீடு இருக்கக் கூடாது' என்று அமெரிக்கப் பிரதிநிதியும் கூறியிருக்கின்றனர்.

வாக்குப்பதிவு செய்கையில் கையெழுத்திடும் முறை

இருக்கக் கூடாதென எதிர்ப்பு

தனிலப் பிரதம தேர்தல் அதிகாரியிடம் சர்வ கட்சிப் பிரதிநிதிகள் வற்புறுத்தல்

சென்னை, பிப் 8—

'நகரங்களில் வாக்குப் பதிவு செய்வோர், தங்கள் கையெழுத்தையோ, பெருவிரல் குறியையோ அடையாளமாகத் தரவேண்டும்' என்று தேர்தல் குழு விதித்திருப்பதற்கு, திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்டுக் கட்சி. பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி ஆகியவை எதிர்ப்பு தெரிவித்ததையொட்டி, மாநில பிரதம தேர்தல் அதிகாரி, இந்த முறையைக் கைவிடுவதுபற்றி விரைவிலேயே முடிவு தெரிவிப்பதாகக் கூறியுள்ளார்.

தேர்தல் அதிகாரி, இன்று தமது அலுவலகத்தில் பல கட்சிப் பிரதிநிதிகளையும் அழைத்து, நடைபெறவிருக்கும் தேர்தல்கள் பற்றிப் பேசினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் அவர்களும் பி. சோ. கட்சி சார்பில் தோழர்கள் சுப்பிரமணியம், வி. ஆர். இராதாகிருஷ்ணன் ஆகியோரும் கம்யூனிஸ்டு கட்சி சார்பில் தோழர் எ. எஸ். கே. ஐயங்கார், திருமதி கல்யாணி ஆகியோரும் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

தேர்தலுக்காகக் கூட்டங்கள் நடத்துவதற்கு சென்னையிலும் இதர இடங்களிலும், தேவையான அளவு இடங்கள் ஒதுக்கித்தர வேண்டும் என்றும், புதிய மின்சார 'மைக்போன்' உபயோகிப்பதற்கு அனுமதிக் கட்டணம் வாங்கக்கூடாது என்றும், போட்டியிடும் ஒவ்வொரு அபேட்சகரும் அல்லது ஒவ்வொரு கட்சியும் கூட்டங்கள் நடத்துவதற்கு ஒவ்வொரு முறையும் இரண்டு ரூபாய் கட்டணம் தந்து அனுமதி பெறவேண்டியிருக்கும் முறைக்குப் பதிலாகப் பெயரளவில் ஒரு தொகையைச்செலுத்திவிட்டுத் தேர்தல் கூட்டங்கள் நடத்திக்கொள்ள அனுமதி வேண்டும் என்றும் கூட்டத்தில் அதிகாரியிடம் கோரப்பட்டது.

மேலும், கூட்டங்கள் நடத்துவதற்குப் போலீஸ் அனுமதி தருவதில் காலதாமதம் கூடாது என்றும், உடனுக்குடன் கூட்டம் நடத்துவதற்கான அனுமதி தரவேண்டும் என்றும்கோரப்பட்டது.

வாக்காளர் பட்டியலின் ஒரு பிரதி எல்லாக் கட்சி அபேட்சகர்களுக்கும் இலவசமாகத் தரப்படவேண்டும் என்றும், அத்துடன் எல்லாக் கட்சிகளுக்கும் ஒரு பிரதி வேண்டும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

மற்றும், வாக்குப் பதிவு நிலையங்கள், சாவடிகள் அடங்கிய தொகுதிவாரிப்பட்டியலும், ஒவ்வொரு அபேட்சகருக்கும் இரண்டு பிரதிகள் இலவசமாகத் தரப்படல் வேண்டும் என்றும் கோரப்பட்டது.

தேர்தல் வேலைகளில் ஈடுபடும் போலீசார், அதிகாரிகள் ஆகியோர் கட்சிகளுக்கிடையே பாரபட்சம் காட்டக்கூடாது என்பதை பிரதம தேர்தல் அதிகாரி கண்டிப்பாக அமுல் செய்ய வேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டது.

வலுக்கட்டாயப்படுத்தாதே!

'ஆனால் வஞ்சக வழி செல்லு'

இந்தி வெறியர்களுக்கு மொரார்ஜிதேசாய் உபதேசம்

கல்கத்தா, பிப். 8—

இந்திமொழி பரவுவதற்கு, இந்திப் பிரியர்கள் நிர்ப்பந்தமான முறைகளைக் கைக்கொள்ளாமல், இந்தி கற்குமாறு தூண்டுகிற முறையினைக் கைக்கொள்ளவேண்டும் என்று உபதேசம் புரிந்துள்ளாராம், மத்திய மந்திரியான மொரார்ஜி தேசாய் !

இந்திக் கவிஞர்கள் விழாக் கூட்டத்தைத் துவக்கி வைத்துப்பேசிய அவர், மொழித் தகராறினைக் கிளப்புகிற வகையில் கடந்த காலத்தில் சில வழிமுறைகளை இந்திப் பிரியர்கள் கைக்கொண்டுவிட்டதாகவும் கூறியிருக்கிறார்.

"இது, இந்தி பேசாத மக்களிடை எதிர்ப்புணர்ச்சியை ஊட்டியுள்ளது மட்டுமின்றி, இன்னும் நாடெங்கிலும் ஆங்கில மொழி ஆதிக்கமே நீடிப்பதற்கும் துணை புரிந்திருக்கிறது" என்றும் மொரார்ஜி தேசாய் கூறியுள்ளாராம்!

*-***************-*

மாபெரும் ஊர்வலம்

10—2—57 ஞாயிறு காலை 7-30 மணிக்கு இராயபுரம் 'அறிவகத்'திலிருந்து தி மு கழகத் தேர்தல் சின்னமான உதய சூரியன்' அலங்கரிக்கப்பட்டு பேண்டுவாத்தியங்கள் முழங்க தி. மு. கழக அபேட்சகர்களுடன், கிளைக் கழகத் தோழர்கள், சார்பு மன்றங்கள், படிப்பகங்கள் ஆகியவற்றைச் சார்ந்த தோழர்களும் கழகக் கொடிகளுடன் ஆயிரக்கணக்கில் அணிவகுத்து, கீழ்க்கண்ட தெருக்கள் வழியாகச் சென்று எஸ். ஐ ஏ. ஏ. திடலில் அமைந்துள்ள தி மு. கழகத் தேர்தல் பிரச்சார சிறப்பு மாநாட்டுப் பந்தலை வந்தடையும்.

ஊர்வலம் செல்லும் வழிகள் :—

"சூரிய நாராயண செட்டித் தெரு, கல்மண்டபம் தெரு, கொல்லவார் அக்கிரகாரம்தெரு, ஜாண்ட்ர பிள்ளையார் கோவில் தெரு, திருவொற்றியூர் பெரிய சாலை, தங்கசாலை, அம்மன் கோவில் தெரு, வால்டாக்ஸ் ரோடு, யானை கவுனி, டெமல்லஸ் ரோடு, ஸ் ஹாம்ஸ் ரோடு, புரசைவாக்கம் ஐரோடு, டெல்லீஸ், பூந்தமல்லி ஐரோடு வழியாக வந்து மாநாட்டுத் திடலில் முடிவுறும்,"

என்று, சென்னை மாவட்டத் தி மு. கழகத் துணைச் செயலாளர் கோ. செங்குட்டுவன் அறிவிக்கிறார்.

*******-*******-****

******-********-***

இரயில்வே தொழிலாளர்

தேர்தல் நிதியளிப்பு

★

10-2-57-ல், எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் நடைபெற இருக்கும் தி. மு. கழகத் தேர்தல் சிறப்பு மாநாட்டில், பொம்பூர் இரயில்வே தொழிலாளர் சார்பில் தி. மு. கழகத் தேர்தல நிதி அளிககப்படும்.

*********-****-****

மகளிர் மன்ற

உறுப்பினர்கட்கு :

10-2-57-ல் நடைபெறும் தி. மு. கழகத் தேர்தல் சிறப்பு மாநாட்டையொட்டி காலை 7-30 மணிக்கு, 'அறிவக'த்திலிருந்து புறப்படும் ஊர்வலத்தில் தாய்மார்கள் பெருவாரியாகக் கலந்துகொள்ளுமாறும் மகளிர் மன்ற உறுப்பினர்கள் கூடுமானவரையில் வெள்ளைச் சேலையும் கருப்புச் சட்டையும் அணிந்துவருமாறும் கோருகிறோம்"

என்று சென்னை மகளிர் மன்றத் தலைவர் தோழியர் சத்தியவாணி முத்து அறிவிக்கிறார்.

திருமணம்

10—2—57 காலை 8-மணியளவில், சென்னை—மவுண்ட் ரோட், சுபேதார் உசேன் தெரு, எண் 54 இல்லத்தில், தோழர் கா. அப்பாதுரையார் தலைமையில், தோழர் எழுமலை—தோழியர் எம். லீலா திருமணம் நடைபெறும் தோழர்கள் சி பி சிற்றரசு, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

சென்னை நகரசபைக்கு ரூ. 4—இலட்சம் அனுமதி

சென்னை, பிப். 8—

1955-56-ல் வசூலித்த கல்வி வரி சம்பந்தமாகத் திருத்தப்பட்ட ஆரம்பக் கல்விச் சட்டத்தின்கீழ் 37-வது பிரிவின்கீழ் அரசாங்கத்தின் பங்காக சென்னை நகரசபைக்கு ரூ. 3,96,446-2-4 தருவதற்கு அரசாங்கம் அனுமதித்துள்ளதாம்.

*******-*************************

அண்ணு அவர்கள் தரும் நாடக விருந்து !

12—2—57 செவ்வாய் மாலை 6-30 மணிக்கு

சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில்

[கே. வி. கே. சாமி அரங்கு]

அண்ணு

நடிப்பிசைப் புலவர் **கே. ஆர். இராமசாமி**

மற்றும் கழகத் தோழர்கள் நடிக்கும்

சந்திரோதயம்

கட்டணம்: ரூ. 5, 3, 2, 1; அணு 8.

குறிப்பு :—நாடகத்தன்று காலையிலிருந்தே அணு 8 பிரத்தியேகக் கட்டணத்துடன் முதல் வகுப்பு ரிசர்வ் செய்யப்படும்.

— (தி. மு. க.)

-*************************

அண்ணு தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம்

10—2—57 ஞாயிறு காலை 9 மணிக்கு சென்னை—வண்ணாரப்பேட்டை, மணிகண்ட முதலி 3-வது தெரு, 4-ம் எண் இல்லத்தில், அண்ணு அவர்கள் தலைமையில் எங்கள் வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெறும் என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

V. A. சுப்ரமணியம்,
B Sc., B.PHARM.
மீனும்பாள்

தங்கள் வரவை எதிர்பார்க்கும் :—
தி ட்ரக் ஹவுஸ், சென்னை.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.